
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1103

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

47

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# ‘குலக்கொழுந்து’ ஜமீன்தாரியத்தைக் கேள்விக்குள்ளாக்கிய திரைப்படம்!

1981-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் வெளிவந்த திரைப்படமாகும். நடிகர்கள் ஜெய்சங்கரும் கே.ஏ.அசோகனும் இணைந்து தொடர்ச்சியாகக் கலைஞரின் வசனத்தில் (1978-1981) மூன்று படங்களில் நடித்துள்ளனர். இது மூன்றாவது படமாகும். தயாரிப்பு ஈ.வி.ராஜன். இயக்கம் ராமண்ணா. ‘வண்டிக்காரன் மகன்’ திரைப்படத்தைப் போலவே ‘குலக்கொழுந்து’ திரைப்படமும் ஜமீன்தார் குடும்பத்தைக் கதைக்களமாகக் கொண்டு இயங்குகிறது. ஆனால், இது நேரடியாக ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் இடையிலான முரணைப் பேசிய திரைப்படமல்ல. மாறாக, ஜமீன்தாரின் வறட்டுக் கௌரவத்தால், அவரது குடும்பம் சீரழிவதையும் ஏமாற்றுக் காரர்களால் அல்லல்படுவதையும் பற்றிய திரைப்படமாகும்.

இப்படத்தின் கதை, மிகச் சுருக்கமானது. இரத்தினகிரி மாஜி மன்னர் செந்தாமரை, மனைவி அமுதா (சௌகார் ஜானகி). இவர்களுக்கு இரு மகன்கள். மூத்த மகன் சந்திரமோகன் கோவாவில் உள்ள ஒனாசிஸ் ஹோட்டலில் டான்சராக இருக்கும் பாமாவைக் காதலிக்கிறான். அப்பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி, தன் பெற்றோரிடம் சம்மதம் கேட்க அழைத்து வருகிறான். ஆனால், ஜமீன்தார் தனது பரம்பரைக் கௌரவம் பாழாகிவிடும் என்று சொல்லி மறுக்கிறார். சந்திரமோகனின் தாயும் கணவனுடன் சேர்ந்துகொண்டு மறுப்பதால், சந்திரமோகன் வீட்டை விட்டு வெளியேறி, பாமாவைத் திருமணம் செய்துகொள்வதுடன் வாழ்க்கைத் தேவைக்காக லாரி ஓட்டுநர் வேலை செய்து மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்துகின்றான்.

இவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அதற்கு, கண்ணன் என்று பெயரும் சூட்டு கின்றனர்.

இந்நிலையில், ஒரு நாள் ஓட்டல் முதலாளி ஒனாசிஸ் (கே.ஏ.அசோகன்) சந்திரமோகனை அழைத்து, தான் தரும் கடத்தல் பொருளை லாரியில் எடுத்துச்சென்று, மும்பையில் குறிப்பிட்ட நபரிடம் கொடுத்தால், பணம் தருகிறேன் என்கிறான். சந்திரமோகன் கடத்தலில் ஈடுபட மறுத்து விடுகிறான். இதனால் கோபம் கொள்ளும் ஒனாசிஸ், தன்னைப் பற்றிய ரகசியம் அறிந்த சந்திரமோகன் உயிரோடு இருக்கக் கூடாது என்று சொல்லி, தனது அடியாள் மூலமாக லாரி ஓட்டி வரும் சந்திரமோகனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்கிறான்.

### ஜமீன் கௌரவம்

லாரியில் சந்திரமோகனுடன் பயணம் செய்த அவன் மனைவி பாமாவும் படுகாய முறுகிறாள். அதனால் பாமா, தன் மகன் கண்ணனைத் தன் தங்கை பிரேமாவிடம் (ஸ்ரீபிரியாவிடம்) ஒப்படைத்து, ‘தமது ஜமீன் கௌரவம் கெடக்கூடாது என்பதற்காக, சந்திரமோகனின் தந்தைதான் கொலை செய்தார் என்றும், அதனால் தன் குழந்தையை எக்காரணம் கொண்டும் ஜமீன்தார் குடும்பத்திடம் கொடுத்துவிடக் கூடாது’ என்றும் கூறிவிட்டு இறந்து போகிறாள்.

ஆனால், தன் மகன் சந்திர மோகன் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட அதிர்ச்சியில், ஜமீன்தார் பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்துவிடுகிறார். இவற்றையெல்லாம் கேள்விப் பட்டு, அமெரிக்காவில் படித்துக் கொண்டிருக்கும் ஜமீன்தாரின் இரண்டாவது மகன் தம்பிதுரை (ஜெய்சங்கர்) இரத்தினகிரிக்குத் திரும்பி வருகிறான். தங்களின் பேரன் கண்ணனை அரண்மனைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தன் பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதற்காக தம்பிதுரை கோவாவுக்குச் சென்று பிரேமாவைச் சந்தித்து, கண்ணனை அரண்மனைக்கு அனுப்பும்படி கேட்கிறான்.

அக்கா பாமாவைப் போலவே பிரேமாவும் அதே ஒனாசிஸ் ஹோட்டலில் டான்சராக இருக்கிறாள்.

‘என் அக்காவையும் அவள் கணவர் சந்திரமோகனையும் உங்க அப்பாதான் தனது ஜமீன் கௌரவம் பறிபோய்விடக் கூடாது என்பதற்காகக் கொலை செய்தார். அதனால், அந்தக் குடும்பத்திற்கு கண்ணனை நான் அனுப்ப மாட்டேன்’ என்கிறாள். வேறு வழியின்றி, நீதிமன்றத்தில் ஜமீன் குடும்பத்தினர் வழக்கு தொடுக்கின்றனர்.





ஆனால், சிறுவன் கண்ணனோ, தான் தன் சித்தியுடன் இருக்க விரும்புவதாக நீதிமன்றத்தில் சொல்வ தால், பிரேமாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வருகிறது. பணவெறி கொண்ட ஒனாசிஸ், குழந்தை கண்ணனை கடத்தி வைத்து, ஜமீன் குடும்பத்தினரிடம் பணம் பறிக்கத் திட்டமிடுகிறான். இச்சதித்திட்டத்திற்கு ஜமீன்தார் மனைவி அமுதாவின் உடன் பிறந்த தங்கை குமுதா ஒத்துழைக்கிறாள்.

ஒனாசிஸ் உடைய இந்த சதிச்செயல்களை எல்லாம் அறியும் பிரேமா, குழந்தை கண்ணனை தம்பி துரையுடன் ஜமீன் மாளிகைக்கு அனுப்ப சம்மதிப்பதுடன், தம்பி துரையைத் திருமணம் செய்துகொள்ளவும் சம்மதிக் கிறாள்.





ஆனால், அதற்குள் கண்ணனையும் அமுதா வையும் ஒனாசிஸ் கடத்தி ஓரிடத்தில் அடைத்து வைத்துவிட்டு, அமுதாவைப் போல் குமுதாவுக்கு வேட மிட்டு அனுப்பி, ஜமீன் மாளிகையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, சொத்துகளையும் பணத்தையும் அபகரிக் கின்றனர். தம்பிதுரையும் அவனது நண்பன் மணியும் (வெண்ணிற ஆடை மூர்த்தி) பிரேமாவும் சேர்ந்து ஒனாசிஸ் உடைய அடியாள் கூட்டத்தை எதிர்த்துப் போராடி, அமுதாவையும் கண்ணனை யும் ஜமீன் மாளிகையையும் மீட்கின்றனர்.

பிறகு, இறுதியில் சந்திர மோகனைக் கொலை செய்த குற்றத்திற்காக ஓட்டல் முதலாளி ஒனாசிஸ் (அசோகன்) மற்றும் குமுதா (சௌகார் ஜானகி) ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர். பெற்றோர் சம்மதத்துடன் பிரேமாவை தம்பிதுரை திருமணமும் செய்துகொள்கிறான். கண்ணன் தனது தாத்தா பாட்டியுடன் சேர்வதோடு படம் நிறை வடைகிறது.

இதுவே குலக்கொழுந்து திரைப்படத்தின் கதை.

...காட்சி விரியும்

> **“பணவெறி கொண்ட ஒனாசிஸ், குழந்தை கண்ணனை கடத்தி வைத்து, ஜமீன் குடும்பத்தினரிடம் பணம் பறிக்கத் திட்டமிடுகிறான். இச்சதித்திட்டத்திற்கு ஜமீன்தார் மனைவி அமுதாவின் உடன் பிறந்த தங்கை குமுதா ஒத்துழைக்கிறாள்.”**

---

## முன்னோடியாகத் திகழும் திராவிடம்!

உலக அளவில் பல்வேறு அரசியல் பொருளாதார சூழல்களுடன், தமிழ்நாட்டின் இன்றைய திராவிட மாடல் அரசு முன்னெடுக்கும் முயற்சிகளை ஒப்பிட்டு ‘வையம்’ பிப்ரவரி 2026 இதழில் அரசியல் விமர்சகர் யமுனா ராஜேந்திரன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அதில், “இன்று, இருப்பிடம், கல்வி, வேலை, மருத்துவம். போக்குவரத்து போன்றவற்றை அனைத்து மக்களுக்கும் எளிதானதாக ஆக்க வேண்டும், சிறுபான்மை இனத்தவர், விளிம்புநிலையில் வாழும் மக்களையும் இந்த உரிமைகள் சென்று சேர வேண்டும் எனக் கருதுகிறோம். வரலாறு முழுவதும் இரண்டாம் பாலினமாகவும், ஒடுக்கப்பட்டும் இருந்த பெண்களின் உரிமைகளை நாம் வலியுறுத்துகிறோம்.

மொழிவழி மாநிலங்களாகப் பிரிவுபட்ட இந்திய ஒன்றியத்தில் இன்று தமிழகத்தின் நிலை என்ன? பொருளியல் பொதுவுடைமை, ஜனநாயகம், தனிமனித உரிமை, சமூகநீதி எனும் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது?

காலனியத்தை நாம் இந்தியச் சூழலில் பார்ப்பனியத்துடன் ஒப்பிட முடியும். நிதி, அதிகாரம், சிந்தனை மேலாண்மை என அனைத்தும் கொண்டதாக பார்ப்பனியம் இருக்கிறது. எல்லா வகையிலும் தமிழக விடுதலைக்குப் பார்ப்பனிய நீக்கம் நிகழ வேண்டும். சோவியத் யூனியன் சிதறிய அனுபவங்களுடன், மிகச் சரியாகவே தமிழக முதல்வர் ஸ்டாலின் வடவரின் இந்திமொழி ஆதிக்கத்தை ஒப்பிடுகிறார்.

இனம், மொழி, சாதி, பாலினம், மதம் என அனைத்தும் சார்ந்த தமிழகத்தின் ‘சமூகநீதிச் சிற்பி’ பெரியார் என்றால், தமிழக ஜனநாயகத்தின் சிற்பி அண்ணா. தமிழகம் கல்வி, மருத்துவம், பொதுப் போக்குவரத்து போன்றவற்றுக்குத் தரும் முக்கியத்துவம் கியூபாவின் சாதனைகளுக்கு இணையானது. சமூக வாழ்வில் பெண்களின் சுதந்திரமும் முன்னேற்றமும் குறித்த பிரச்சினையில் தமிழக நிலைமை நிலவிய சோசலிச நாடுகளின் சாதனைகளுடன் ஒப்பிடத்தக்கது.

தமிழக அரசின் மீது பி.ஜே.பி. திணித்துவரும் நிதித்தடைகள், கியூபாவை பொருளியல் நெருக்கடிக்குத் தள்ளும் பேரரசான அமெரிக்காவின் வன்மத்தை ஒத்தது. இத்தனையையும் தாண்டித்தான் தமிழகம் தனது சமத்துவ அரசியலை முன்னெடுத்து வருகிறது. மனிதரின் அடிப்படைத் தேவைகள், அடிப்படை உரிமைகள், ஜனநாயக அவா, சமூகநீதி கொண்ட மாற்றுச் சமூகம் எனும் அளவில், திராவிட மரபு அனைத்து இந்தியாவுக்குமே முன்னோடியாக இருக்கிறது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



கே.ஜபருல்லா



### விளாச்சேரியில் 30 ஆண்டுகளுக்கு முன்...

1994-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், மதுரை, திருப்பரங்குன்றம் ஒன்றியம் விளாச்சேரியில் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து சிறப்புரையாற்றினார். அப்போது, விளாச்சேரி கிளைக் கழகச் செயலாளராக இருந்த நான், மேடையில் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பு அளித்தேன்.

**– கே.ஜபருல்லா, விளாச்சேரி, திருப்பரங்குன்றம் ஒன்றிய பிரதிநிதி, மதுரை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## மலரும் நினைவுகள்

### கண்ணியமான பிரச்சாரம்!

1971-ஆம் ஆண்டு, ஜனவரி 6-ஆம் தேதி, சட்ட மன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் விதமாக, சென்னை வானொலியில் உரையாற்றினார் கலைஞர். “தமிழ்நாட்டின் அரசியல் கட்சியினர் தமது கொள்கை விளக்கங்களைத் தரக்குறைவு எதுவும் ஏற்படா வண்ணமும், தமிழ்நாட்டின் பண்பாடு குறையாத வண்ணமும் பிரச்சார இயக்கத்தை மேற்கொள்ள வேண்டும். கொடும் பகை உணர்வு ஒழிந்து, கொள்கைப் பற்றுணர்வு மிகுந்து, கருத்து ஒருமித்த நட்புடன் தேர்தல் பணியில் ஈடுபட வேண்டும்” என அரசியல் கட்சிகளைக் கேட்டுக்கொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131